


ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஆகஸ்ட். 08, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 305 ❖ ரூ.10

### அதிமுக ஆட்சியில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கு

# சிக்கல்

## முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் அவரது மனைவி ரம்யா இருவரும் நேரில் ஆஜராக புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவு



**புதுக்கோட்டை, ஆக. 8-**

**முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்த நிலையில் வருகின்ற 29ம் தேதி அவரையும் அவரது மனைவி ரம்யாவையும் நேரில் ஆஜராக புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

புதுக்கோட்டை மாவட்டத்தைச்சேர்ந்தவர் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர். இவர் தற்போது விராலிமலை சட்டமன்ற தொகுதி உறுப்பினராகவும் உள்ளார். இந்நிலையில்இவர் அதிமுக அமைச்சரவையில்8ஆண்டு காலமாக சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த நிலையில் அவர் அமைச்சராக இருந்த காலகட்டத்தில் ஊழல்கள் முறைகேடுகள் என பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்து வந்தது. குறிப்பாக கடந்த 2017ம் ஆண்டு இவர் அமைச்சராக இருந்தபோது இவரது வீடு உள்ளிட்ட இவருக்கு சம்பந்தமான பல்வேறு இடங்களில் ஆர்.கே நகர் இடைத்தேர்தலில் 89கோடி ரூபாய் பணப்பட்டுவாடா குட்கா முறைகேடு உள்ளிட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் வருமான வரித்துறையினர் அமலாக்கத் துறையினர் உள்ளிட்ட பல்வேறு துறையினர் சோதனை செய்தனர்.

அதன் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் 2021அக்டோபர் மாதம் 18ம் தேதி தமிழ்நாடு சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் 2016 முதல் 21 வரை வருமானத்தை விட அதிகமாக 27 கோடி ரூபாய் மதிப்பில் அசையும் அசையா சொத்துக்கள் என பல்வேறு சொத்துக்களை வாங்கி குவித்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்கு பதிவு செய்து அவரது வீடு உள்ளிட்ட 56 இடங்களில் அதிரடியாக சோதனை செய்தனர். இந்த சோதனையில் 23.85லட்சம் ரூபாய் ரொக்கம் 4.87 கிலோ தங்கம் 136 கனரக வாகனங்களின் சான்றுகள் 19 ஹார்ட்டிஸ்க் என பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இவர் அமைச்சராக இருந்த காலகட்டத்தில் கொரோனாவில் மருத்துவ உபகரணங்கள் வாங்கியதில் முறைகேடுகளில் ஈடுபட்டார் என பல்வேறு குற்றச்சாட்டுகளும் எழுந்து வந்த நிலையில் திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை தாலுகா மஞ்சக்ரனை கிராமத்தில் உள்ள வேல்ஸ் என்ற தனியார் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு தேசிய மருத்துவ குழுமத்தின் விதிமுறைகளுக்குமுரணாக முறைகேடாக தகுதி சான்றிதழை 2020ம் ஆண்டு தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் வழங்கி உள்ளதாககிடைக்கப்பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் தமிழ்நாடு முழுவதும் விஜயபாஸ்கருக்கு சொந்தமான 13இடங்களில் கடந்த 2022 செப்டம்பர் மாதம் அதிரடியாக சோதனை நடத்தினர்.

இந்நிலையில்முன்னாள் அமைச்சர்கள் மீது லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சோதனை மட்டுமே நடத்தி உள்ளதாகவும் அதற்குப் பிறகு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பல்வேறு அரசியல் கட்சியினர் விமர்சனம் செய்துவந்த நிலையில் ஆதாரப்பூர்வமாக தவறு செய்த முன்னாள் அமைச்சர்கள் மீது நடவடிக்கைஎடுக்கப்படும் என தமிழ்நாடு அரசு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸாரால் பதியப்பட்ட வழக்கில் 56 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சோதனை நடத்தியதில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வருமானத்தை விட அதிகமாக 53 சதவீதம் குறிப்பாக 35 கோடியே 79 லட்சம் ரூபாய் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை இவரது பெயரிலும் இவரது மனைவிரம்யாபெயரிலும் வாங்கி குவித்தது தெரிய வந்ததை தொடர்ந்து விஜயபாஸ்கர் மீதும் அவரது மனைவி ரம்யா மீதும்கடந்தமேமாதம்22ம் தேதிபுதுக்கோட்டைலஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஒன்றில் ஆஜராகி நீதிபதி ஜெயந்தி முன்பு 216 பக்க குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளனர். மேலும் இந்த குற்றப்பத்திரிக்கையில் சென்னை டி நகரில் 14 கோடி ரூபாய் மதிப்பில் வீடு அசையும் சொத்துக்களான 70-க்கும் மேற்பட்ட வாகனங்கள் தொழிற்சாலைகள் என 800 சொத்துக்களை வருமானத்திற்கு அதிகமாக வாங்கி குவித்துள்ளதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் குற்றப்பத்திரிக்கையில் தகவல் தெரிவித்து பத்தாயிரம் பக்க சொத்து ஆவணங்களை சமர்ப்பித்தனர்.

இந்நிலையில்தான் இந்த வழக்கு புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அந்த நீதிமன்றம் மூலம் கடந்த 10 தினங்களுக்கு முன்பு விஜயபாஸ்கருக்கு சம்மன் அனுப்பப்பட்டிருந்த நிலையில் கடந்த ஐந்தாம் தேதி விஜயபாஸ்கர் மாவட்டம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நேரில் ஆஜரான நிலையில் வருகின்ற ஆகஸ்டு 29ம் தேதி விஜயபாஸ்கரையும் அவரது மனைவி ரம்யாவையும் நேரில் ஆஜராக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் இதற்கு அடுத்த கட்டமாக திருவள்ளூர்மாவட்டத்தில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரிமருத்துவமனைக்கு முறைகேடாக சான்றுகள் வழங்கியவழக்குஉள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 5–ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி கருணாநிதி நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை

**சென்னை , ஆக. 8-**

முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதியின் 5-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் திமுக-வினர் அமைதிப் பேரணி மேற்கொண்டனர்.



சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள கருணாநிதி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்திய முதல்வர் மு.க. ஸ்டாலின், பின்னர் அங்கிருந்து பேரணியை தொடங்கினார். முதல்வர் ஸ்டாலின்தலைமையிலான இந்த பேரணியில் தமிழக அமைச்சர்கள் துரைமுருகன், நேரு, பொன்முடி, எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், எஸ். ரகுபதி, மெய்யநாதன், மஸ்தான், தங்கம் தென்னரசு, சேகர் பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர். மக்களவை உறுப்பினர் டி.ஆர். பாலு, தயாநிதி மாறன், கனிமொழி உட்பட திமுக அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், திமுக மூத்த நிர்வாகிகள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த பேரணியில் பங்கேற்றனர்.


சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் சென்ற இந்த பேரணி, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் நிறைவடைந்தது. அங்கு முதல்வர் ஸ்டாலின் உட்பட அனைவரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்த பேரணியை முன்னிட்டு ஏராளமான போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# வடசென்னை புத்தகத் திருவிழா அமைச்சர் பி.கே.சேகர் பாபு திறந்து வைத்தார்

## பல்வேறு தலைப்புகளில் 4 லட்சம் புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன



சென்னை, ஆக,8

நேசம் மனிதவள மேம்பாட்டு மையம் ஒருங்கிணைப்பாளர் பி.டி.பாண்டி செல்வம் ஏற்பாட்டில் 8 ஆம் ஆண்டு வடசென்னை புத்தக திருவிழா சென்னை புதுவண்ணாரப் பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலை டோல்கேட் பேருந்து நிலையம் அருகே உள்ள தங்கம் மாளிகை நடைபெறும் புத்தக திருவிழா இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர், விஜிபி சந்தோசம், கலந்துகொண்டு புத்தக திருவிழாவை தொடங்கி வைத்தனர்.

10நாட்கள்நடைபெறும் இந்த புத்தக திருவிழாவில் 40 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன பல்வேறு தலைப்புகளில் 4 லட்சம் புத்தகங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தினமும் பல்வேறு தலைப்புகளில் ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, நடன போட்டி, கிராமிய நடன போட்டி என பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசாக சான்றிதழ் வழங்கப்படுகிறது ஆயிரம் ரூபாய்க்கு மேல் புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு நூல் ஆர்வலர் விருது வழங்கப்படுகிறது.

# தென்காசியில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது



தென்காசி , ஆக- 08:

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் பெற்றுக்கொண்டார்.

மாற்றுத்திறனாளிகள் நல துறையில், உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 13-மாற்றுத்திறனாளிகளுக்கு மடக்கு சக்கர நாற்காலிகள் தலா ரூ.13,500/- வீதம் மொத்தம் ரூ.1,08,000 மதிப்பிலும் 05-மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகள் தலா ரூ.8,500/- வீதம் மொத்தம் ரூ.42,500 மதிப்பிலும் என மொத்தம் ரூ.1,50,500 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் வழங்கினார்.

மேலும் இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக் கோருதல், பட்டாமாறுதல், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என 430 மொத்தம் மனுக்கள் பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரியபதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கு.பத்மாவதி, உதவி ஆணையர் (கலால்) ராஜமனோகர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சங்கரநாராயணன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயபிரகாஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா.இளவரசி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






திருவொற்றியூர் மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு ஏற்பாட்டில் திருவெற்றியூர் கிழக்குப்பகுதி திமுக அலுவலகத்தில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கலைஞரின் திருவுருவ படத்திற்கு வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதனையடுத்து 100.க்கும் மேற்பட்ட மாநகராட்சி பள்ளி மாணவ மாணவிகளுக்கு புத்தக பை, மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வெஜிடபிள் பிரியாணி வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி கணேசன், பகுதி துணை செயலாளர்கள் சம்பத்,குமார், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் நித்யாதாசன், வட்டசெயலாளர் கேபிள் டிவி ராஜா, தமிழ்ச்செல்வன், மகளிர் அணி அமைப்பாளர் கோமளவல்லி, மாவட்ட பிரதிநிதி நந்தி, ரஜினி பாபு, மதிவாணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# முன்னாள் முதல்வர் கலைஞரின் 5 ஆம் ஆண்டு நினைவு தின அமைதி பேரணி



தரங்கம்பாடி, ஆக- 08:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியம் இலுப்பூர் ஊராட்சியில் தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதியின் 5 ஆம் ஆண்டு நினைவு தின அமைதி பேரணி செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அப்துல் மாலிக் தலைமையில் இலுப்பூர் அஞ்சல் நிலையத்திலிருந்து சங்கரன்பந்தல் கடைவீதி வரை அமைதி பேரணி நடைபெற்றது. தொடர்ந்து பேருந்து நிழலகம் முகப்பில் அமைக்கப்பட்டிருந்த கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்

இதில் தஞ்சை மண்டல தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.சித்திக், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவகுமார், கண்ணகி பன்னீர்செல்வம், பொருளாளர் ரங்கராஜன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விக்கி, மாவட்ட பிரதிநிதிகள் கே எஸ் எஸ் கருணாநிதி, ஈச்சங்குடி இளங்கோவன், கே.பி. ராஜா மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், மகளிர் அணி, இளைஞர் அணி, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் வட்டம், பூங்குடி கிராமத்தில் இயங்கி வந்த வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில், காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த வெள்ளனூரைச் சேர்ந்த சுரேஷ் என்பவரின் வாரிசுதாரரிடம், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று நேரில் சந்தித்து ஆறுதல்கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி ரூ.3 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, அரசு வழக்கறிஞர் பூங்குடி சிவா, வட்டாட்சியர் சக்திவேல் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதியின் 5 ஆம்ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் கேப்டன் எஸ் எம் செல்வராஜ் தலைமையில் வடக்கு ஒன்றியம் கொல்லுமாங்குடியில் 5 ஆம் ஆண்டு நினைவு தின அமைதி பேரணி நடைபெற்றது. இதில் ஏராளமான திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டு கொல்லுமாங்குடி கடைவீதியில் அமைக்கப்பட்டிருந்த கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் தொடர்ந்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.



புதுக்கோட்டை நகர்மன்றத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்திய, 6வது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா நிறைவு நாள் விழாவில், திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் சு.திருநாவுக்கரசர் விழா சிறப்புரையாற்றினார். உடன் சென்னை பெருநகர வளர்ச்சி குழும (CMDA) முதன்மை | செயல் அலுவலர் கவிதா ராமு, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் மற்றும் அலுவலர்கள், விழா ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளனர்.

# நாட்டில் ஜனநாயகம் இருக்க வேண்டுமா, இருக்க முடியாதா என்பதற்கானது 2024 நாடாளுமன்றத் தேர்தல் ஸ்டாலின்



சென்னை , ஆக- 08:

இந்தியாவில் ஜனநாயகம் இருக்க வேண்டுமா இருக்க முடியாதா என்பதற்கான தேர்தல் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மறைந்ததிமுகதலைவர் மு.க. கருணாநிதியின் 5ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள ஆடியோ செய்தியில்: "நூற்றாண்டு விழ நாயகரே உங்களைக்காண அணிவகுத்து வருகிறோம். உங்களுக்குச் சொல்ல ஒரு நள்ள செய்தியை கொண்டு வருகிறேன். உங்கள் கனவுகளை எல்லாம் நிறைவேற்றி வருகிறோம் என்பதுதான் அந்த நல்ல செய்தி. நீங்கள் இருந்து செய்ய வேண்டியதைத்தான் நான் அமர்ந்து செய்து கொண்டிருக்கிறேன். 95 வயது வரை நாளெல்லாம் உழைத்தீர்கள். இனம், மொழி, நாடு காக்க ஓய்வெடுக்காமல் உழைத்தீர்கள். உங்கள் உழைப்பின் உருவக வடிவம்தான் இந்த நவீன தமிழ்நாடு.

ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்றீர்கள். அந்த கரகர குரல்தான் கண்டிப்புக் குரலாக என்னை உழைக்கவைத்துக் கொண்டிருக்கிறது. எனக்குப் பின்னால், பேராசிரியர் அன்பழகனுக்குப் பின்னால் யார் என்று கேட்டால் இங்கு அமர்ந்திருக்கும் ஸ்டாலின் என்று எந்த நம்பிக்கை வைத்து சொன்னீர்களோ அந்த நம்பிக்கையைக் காக்கவே உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

8கோடி தமிழ் மக்களும் ஏதாவது ஒரு வகையில் பயனடையும் வகையில் திட்டத்தை தீட்டி, திமுக ஆட்சியை தித்திக்கும் மக்களாட்சி மாண்போடு நடத்திவருகிறோம்.ஒற்றைக் கையெழுத்துப்போட்டால் அது கோடிக்கணக் கானவர்களை மகிழ்விக்கிறது. ஒரே ஒரு உத்தரவு லட்சக்கணக் கானவர்களை ரட்சிக்கிறது. தமிழ்நாடு தலைநிமிர்கிறது. இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக உயர்கிறது. உங்கள் கனவுகள் நிறைவேறும் காலமாக ஆகிவிட்டது.

நீங்கள் இருந்து செய்ய வேண்டியதைத்தான் நான் அமர்ந்து செய்து கொண்டிருக்கிறேன். இதற்கிடையில் 2024ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் எங்களை எதிர்நோக்கி வந்து கொண்டிருக்கிறது. வழக்கமாய் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் தேர்தல் அல்ல இது. இந்த கட்சி ஆட்சியா, அந்த கட்சி ஆட்சியா என்பதற்கான விடை அல்ல இந்த தேர்தல். இந்தியாவில் ஜனநாயகம் இருக்கவேண்டுமா இருக்க முடியாதா என்பதற்கான தேர்தல் இது.

தமிழ்நாட்டில் கால் பதித்து நின்று இந்தியாவுக்காக குரல் எழுப்ப வேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள். அப்படித்தான் இந்தியாவுக்கான குரலை, எழுப்ப தொடங்கி இருக்கிறோம். அனைத்துக்கும் தொடக்கம் தமிழ்நாடு. இண்டியாவுக்கான பாதை அமைத்ததும் தமிழ்நாடு. இது இந்தியா முழுவதும் பரவிவிட்டது. சுயமரியாதை, சமூக நீதி, சமதர்மம், மொழி, இன உரிமை, மாநில சுயாட்சி, கூட்டாட்சி இந்தியா என்ற உங்களின் விரிந்த கனவுகளை இந்தியா முழுவதுக்கும் அகலமாக விரித்துள்ளோம்.

திமுக மாநில கட்சிதான். அனைத்து மாநிலங்களுக்கும் உரிமையை பெற்றுத்தரும் கட்சியாக இருக்க வேண்டும் என்ற உங்களின் அந்த கனவும் நிறைவேறப் போகும் காலம் வரும் காலம். உங்கள் நூற்றாண்டு உங்கள் கனவுகளை நிறைவேற்றித்தரும் ஆண்டு. நீங்கள் உருவாக்கிய நவீன தமிழ்நாட்டை நீங்களே ஆள்கிறீர்கள், நீங்களே வாழ்கிறீர்கள், நீங்களே வழிநடத்துகிறீர்கள். உங்கள் வழி நடக்கும் எங்கள் வெற்றிக்கு வாழ்த்துங்கள். வென்று வந்து காலடியில் அதை வைக்கின்றோம்." இவ்வாறு ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# வழக்கறிஞரை தாக்க முயன்றவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி புதுக்கோட்டையில் வழக்கறிஞர்கள் தர்ணா



புதுக்கோட்டை , ஆக- 08:

புதுக்கோட்டையில் குடும்ப பிரச்சினை காரணமாக மனைவி தரப்புக்கு ஆஜரான வழக்கறிஞரை அவரது கணவர் ஆபாச வார்த்தை கூறிதாக்கமுயன்றதாககுற்றம் சாட்டி வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைபுறக்கணித்து இரண்டு மணி நேரத்திற்கு மேலாக சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

புதுக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்காடி வரும் கலீல்ரகுமான் என்ற வழக்கறிஞரிடம் குடும்ப பிரச்சினை காரணமாக ஜஸ்மி வித்தியா என்ற பெண்மணி அணுகிய நிலையில் அவருக்காக கடந்த இரண்டாம் தேதி வழக்கறிஞர் கலீல்ரகுமான் சமரச தீர்வு மையத்தில் ஆஜராகி உள்ளார். அதன்பின் வெளியே வந்த கலீல் ரகுமானை தனது மனைவிக்காக ஏன் ஆஜரானீர்கள் என்று அவரது கணவர் ஆரோக்கியராஜ் ஆபாச வார்த்தை கூறி தாக்க முயன்றதாககூறப்படுகிறது.

இதுகுறித்துவழக்கறிஞர் கலீல் ரகுமான் புதுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் கடந்த இரண்டாம் தேதியே புகார் அளித்த நிலையில் அது குறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.இந்நிலையில் வழக்கறிஞரை தாக்க முயன்ற நபரை இதுவரையில் போலீசார் கைது செய்யாமல் காலம் தாழ்த்தி வருவதாகவும் வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாகவும் உடனடியாக ஆரோக்கியராஜை கைது செய்ய வேண்டுமான வலியுறுத்தி 50க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைபுறக்கணித்து புதுக்கோட்டை மதுரை சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். நீதிமன்ற வளாகத்திற்குமுன்பாகவே நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# தாமரைப்பாக்கம் ஊராட்சியில் அருள்மிகு ஸ்ரீ போலாட்சி அம்மன் திருக்கோவிலில் பக்தர்கள் தீ மிதித்து நேர்த்தி கடனை செலுத்தினர்





ஊத்துக்கோட்டை, ஆக8-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், தாமரைப்பாக்கம் ஊராட்சியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ போலாட்சி அம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில், காப்பு கட்டி விரதம் இருந்த 148 பக்தர்கள் இரவு தீ மிதித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

இத்திருவிழாவை முன்னிட்டு கடந்த 30-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கோவிலில் இருந்து கரகம் ஊர்வலம் செல்லும் நிகழ்ச்சியும்,மண்ணடியில் கூழ்வார்க்கும் நிகழ்ச்சியும், கும்பம் போடும் நிகழ்ச்சியும், அம்மனுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. வியாழக்கிழமை கிராம தேவதையான பொன்னியம்மனுக்கு ஊர் மக்கள் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சியும்,வியாழக்கிழமை குமாரி மக்கள் எனப்படும் பக்தர்களுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சியும்,தெரு கூத்து நிகழ்ச்சியும் நடைபெற்றது.

சனிக்கிழமை மாலை இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்று முன்தினம் காலை அம்மனுக்கு அபிஷேகம்,பூ கரகம் புறப்பாடு,அலகு பானை நிற்கவைத்தல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. காப்பு கட்டி விரதம் இருந்த குமாரி மக்கள் நேற்று முன் தினம் மாலை ஈஸ்வரன்கோவில்அருகேபுனித நீராடினர்.பின்னர்,அவர்களை பூக்களாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் சென்று கோவிலுக்கு அழைத்துவரும்நிகழ்ச்சிவான வேடிக்கையுடன் நடைபெற்றது.

இதன் பின்னர்,கோவிலின் அருகே அமைக்கப்பட்டு இருந்த தீ குண்டத்தில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் பின்,ஒருவராக இறங்கி தீ மிதித்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தினர்.இதன் பின்னர், மங்கள வாத்தியம், வானவேடிக்கை மற்றும் பேண்ட் வாத்தியத்துடன் சுவாமி முக்கிய வீதிகளின் வழியாக உலாவரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிராம பொதுமக்களும்,விழா குழுவினர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் கருணாநிதியின் 5-ம் ஆண்டு நினைவு நாள்

## மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் டி.ஜே.ஜி.தமிழரசன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்



ஊத்துக்கோட்டை, ஆக8-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் தமிழக முன்னாள் முதல்வரும்,திமுக தலைவருமான கருணாநிதியின் 5-ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை அருகே பெருவாயலில் உள்ள கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் பூக்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் திருஉருவ படத்துக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜனின் அறிவுறுத்தலின்படி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் டி.ஜே.ஜி.தமிழரசன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில்,மாவட்ட பொருளாளர் ரமேஷ்,ஊராட்சி மன்ற தலைவர் நமச்சிவாயம், சுற்றுச்சூழல் அணி மு.பாஸ்கர்,கும்மிடிப்பூண்டி கேசவன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய,நகர,பேரூர்,கிளைகழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் ஆட்சியர் அரசு பள்ளியில் திடீர் ஆய்வு மாணவர்களிடம் குறைகள் கேட்டறிந்தார்



காரைக்கால்,ஆக,8

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் திருநள்ளாறில் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

பள்ளியில் அனைத்து பகுதிகளையும் பார்வையிட்ட ஆட்சியர் அவர்கள் மாணவர்கள் பயன்படுத்தும் கழிப்பறை வசதிமற்றும் குடிநீர் வசதி மேலும் அடிப்படை வசதிகள் உள்ளனவா என பார்வையிட்ட ஆட்சியர் அவர்கள் மாணவர்கள் பயன்படுத்தும் கழிப்பறை வசதிகளை மேலும் சுத்தமாக வைத்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். மேலும் அங்கு பணியில் இருந்த ஆசிரியர்கள் ஆட்சியரிடம் மாணவர்களுக்கு ஆரோ குடிநீர் வசதி இருக்கிறது என்றும் ஆனால் போதுமானதாக இல்லை என தகவல் தெரிவித்தார்.

ஆட்சியர் உடனடியாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சிதம்பரநாதன் தொடர்பு கொண்டு இப்பணியை உடனடியாக செய்து முடிக்கும்படி கேட்டு கொண்டார். மேலும் மாணவிகளிடம் உரையாடிய ஆட்சியர் பெண்கள் சிறந்த முறையில் கல்வி கற்க வேண்டும் என்றும் உங்கள் வாழ்வில் முன்னேற கல்வி ஒன்று தான் அடிப்படை அவசியம் என்றும் கூறினார்.

பல்வேறு துறைகளில் பெண்கள் தற்போது சாதித்துக் கொண்டு வருகிறார்கள் என்றும் அதற்கு அடிப்படை காரணம் கல்வியே என்றும் ஆகவே தாங்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாணவிகளை கேட்டுக் கொண்டார் மேலும் வருகை பதிவேட்டை பார்வையிட்ட ஆட்சியர் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் குறித்த நேரத்தில் பணிக்கு வர வேண்டும் என கேட்டு கொண்டதுடன் அங்கு இருந்த ஆசிரியர்களிடம் பெற்றோர்கள் ஆசிரியர்கள் சந்திப்பு நிகழ்வு மாதம் இரு முறையாவது நடைபெற வேண்டும் எனவும் இதன் மூலம் மாணவர்கள் படிப்பு மேம்படும் என ஆட்சியர் கேட்டுக் கொண்டார் மேலும் இப்பள்ளியில் துணை முதல்வர் விஜயமோகனா ஆட்சியரிடம் இப்பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது என தெரிவித்தார்.

# கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பொது மருத்துவ முகாம்



சென்னை , ஆக.8-

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம்திருவொற்றியூர் மேற்குபகுதிதிமுகசார்பில் பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி பகுதி செயலாளர் வை. ம. அருள்தாசன் ஏற்பாட்டில் எண்ணூர் எர்ணாவூர் சுனாமிகுடியிருப்பில்மீனவ மக்கள் நிறைந்த பகுதியில் கண் மூக்கு காது இசிஜி எக்ஸ்ரே மற்றும் பொது மருத்துவம் உள்ளிட்ட சிகிச்சைகளுக்கான மருத்துவ முகாம் நடைபெற்றது

இந்தமருத்துவமுகாமில் சுனாமி குடியிருப்பை சேர்ந்த500க்கும்மேற்பட்ட மீனவ மக்கள் முகாமில் பங்கேற்றுபயனடைந்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் ஆனந்தன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் தியாகராஜன், பகுதி துணை செயலாளர் குறளரசன், மாவட்ட பிரதிநிதி தினேஷ், ராம் குமார், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



அதிமுக பொதுச்செயலாளரும் தமிழக முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமியை சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள இல்லத்தில் அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் பி.ஜாகிர் உசேன் நேரில் சந்தித்து இந்திய தேர்தல் ஆணையம் எடப்பாடி கே. பழனிச்சாமி அஇஅதிமுக பொதுச்செயலாளராக அங்கீகாரம் அளித்தமைக்காக நாகூர் தர்காவில் பொது மக்களுக்கு பிரியாணி உணவு வழங்கி சிறப்பு பிரார்த்தனை செய்த தர்கா சிறப்பு போர்வையினை வழங்கினார். உடன் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளரும் செய்யாறு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தூசி கே.மோகன் அருகில் உள்ளார்.

# செம்பனார்கோவிலில் முன்னாள் முதல்வர் கலைஞரின் 5 ஆம் ஆண்டு நினைவு தின அமைதி பேரணி





தரங்கம்பாடி, ஆக. 8-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோவில் வடக்கு ஒன்றியத்தில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதியின் 5 ஆம் ஆண்டு நினைவு தின அமைதி பேரணி செம்பை வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எம். அன்பழகன் தலைமையில் கீழமுக்கூட்டு அண்ணா திருமண மண்டபத்திலிருந்து மேல முக்கூட்டு அண்ணா சிலை வரை அமைதி பேரணி நடைபெற்றது.

இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஏராளமான திமுக நிர்வாகிகள் தொண்டர்களுடன் செம்பனார்கோவில் கடைவீதி அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், உணவு பொட்டலங்கள், மரக்கன்றுகள் வழங்கினர்.

இதில் தஞ்சை மண்டல தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.சி.என். விஜயபாலன், எம்.எம்.சித்திக், மறுமலர்ச்சி முன்னேற்ற கழக மாவட்ட செயலாளர் கௌஞ்சியம், ஊராட்சி மன்ற தலைவர்கள், மகளிர் அணி, இளைஞர் அணி, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பை தொடர்ந்து

# ராகுல் காந்திக்கு மீண்டும் எம்.பி.பதவி காரைக்காலில் காங்கிரஸ் கட்சி பட்டாசு வெடித்து கொண்டாடினர்



காரைக்கால்,ஆக,8

கடந்த 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவை தேர்தல் பிரசாரத்தின் போது, கர்நாடக மாநிலம் கோலாரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி பேசினார். தனது உரையின் போது, மோடி பெயர் குறித்து ராகுல் முன் வைத்த ஒரு கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியது. ராகுல் காந்தியின் இந்த பேச்சு, மோடி சமூகத்தையே இழிவுபடுத்திவிட்டதாகக் குஜராத் பாஜக எம்எல்ஏ புர்னேஷ் மோடி என்பவர் சூரத் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த சூரத் நீதிமன்றம், கடந்த மார்ச் 23 ஆம் தேதி அன்று தீர்ப்பு அளித்தது. அதில் ராகுல் காந்தி குற்றவாளி என நீதிபதி தீர்ப்பளித்தார். ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 15,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார். இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் ராகுல் காந்தியின் எம்.பி பதவி தகுதி நீக்கம் செய்யப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் ராகுல்காந்தி மேல் முறையீடு செய்தார். இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், ராகுல்காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்து உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பால் லோக்சபா செயலகம் ராகுல் காந்தியின் எம்.பி. பதவியை திரும்ப வழங்கி அறிவிக்கை வெளியிட்டது. இதையடுத்து நாடாளுமன்றத்துக்கு ராகுல் காந்தி எம்.பி.யாக மீண்டும் திரும்பினார்.

இதனைக் கொண்டாடும் வகையில் காரைக்கால் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் சந்திரமோகன் தலைமையில் ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகே திரண்டு பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் ராகுல் காந்தி எம்.பி.பதவி திரும்ப வழங்கப்பட்டதை காங்கிரஸ் கட்சியினர் கொண்டாடினர். இதில் முன்னாள் மாநிலத் தலைவர் ஏ வி சுப்பிரமணியன் காரைக்கால் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரஞ்சித்காரைக்கால் மாவட்டம் மகளிர் காங்கிரஸ் தலைவர் நிர்மலாமாநிலமகளிர் காங்கிரஸ் தலைவி தேவகி காரைக்கால் மாவட்ட பொதுச் செயலாளர் முரளி உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டுவெற்றிமுழக்கங்களை எழுப்பி கொண்டாடினர்.

# கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கவரப்பேட்டையில் கருணாநிதி 5-ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு



ஊத்துக்கோட்டை, ஆக8-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கவரப்பேட்டையில் உள்ள கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக அலுவலகத்தில் தமிழக முன்னாள் முதல்வரும்,திமுக தலைவருமான கருணாநிதியின் 5-ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டுபூக்களால் அலங்கரித்துவைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் திருஉருவ படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கி.வே.ஆனந்தகுமார் தலைமை தாங்கினார். இதில், சிறப்பு அழைப்பாளராக கட்சியின் உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி.வேணு கலந்து கொண்டு கருணாநிதியின் திருவுருவ படத்துக்கு மலர் தூவிமரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், பா.சே. குணசேகர்,கவரப்பேட்டை திருமலை,ஒன்றிய குழு உறுப்பினர் ஜோதி,புலியூர் புருஷோத்தமன்,மங்களம் சுரேஷ், மீசை ராஜா, நெல்வாய் மூர்த்தி, எலெக்ட்ரிசியன் பிரபாகரன், அரப்பு பாபு உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஆரணி பேரூர் திமுக சார்பில் கருணாநிதியின் 5-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, ஆக8-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பேரூர் திமுக சார்பில் தமிழக முன்னாள் முதல்வரும்,திமுக தலைவருமான கருணாநிதியின் 5-ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு ஆரணி பஸ் நிறுத்தம் அருகே பூக்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் திருஉருவ படத்துக்குதிருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜனின் அறிவுறுத்தலின்படி ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதன் பின்னர், அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர்,500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சிகளுக்கு,பேரூர் அவைத்தலைவர் வழக்கறிஞர் க.ரமேஷ் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஆரணி பேரூர்பொருளாளர் குகரிகாலன், நிர்வாகிகள் டி.கோபிநாத், ஆர்.கலையரசி, டி.எஸ். குரவப்பா, முஸ்தபா முனீர், தமிழழகன்,ஜெயக்குமார், நீலகண்டன், டி.எஸ். பாலகுரவப்பா, அரவிந்தன், சூர்யா, ஐடி. சந்தோஷ்பிரபா, ரியல் எஸ்டேட் விஜயகுமார், புதுநகர் பாலாஜி, உதயகுமார், பூண்டு சரவணன், சாய் சத்தியம், டீக்கடை ரவி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் மாவட்டத்தில் 2023-24-ஆம் கல்வி ஆண்டிற்கான மேல்நிலைப்பள்ளி பதினொன்றாம் வகுப்பிற்கான (CBSC) இறுதி கட்ட கலந்தாய்வு



காரைக்கால் , ஆக.8-

புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் 2023-24-ஆம் கல்வி ஆண்டிற்கான மேல்நிலைப்பள்ளி பதினொன்றாம் வகுப்பிற்கான (CBSC) இறுதி கட்ட கலந்தாய்வு நேற்று தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் மேலும் இதுவரை எந்த பள்ளியிலும் சேராத மாணவர்களுக்கும் மற்றும் கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற துணை தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களும் இந்த கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்கபட்டார்கள். இவர்களுக்கு இறுதி கட்ட கலந்தாய்வை நடத்தி பதினொன்றாம் வகுப்பில் சேர்வதற்கான சேற்கை ஆனை வழங்கப்பட்டது.

இக்கலந்தாய்வில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு மாற்றுச் சான்றிதழ் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு மாணவர்கள் விருப்பப்படும் பள்ளிகளுக்கு துணை இயக்குனர் (மேல்நிலைப்பள்ளி)ராஜேஸ்வரி தலைமையில்சேர்க்கை ஆணை வழங்கப்பட்டது.

இந்த கலந்தாய்வில் தலத்தெரு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மேல்நிலைப் பள்ளியின் துணை முதல்வர் ஜெயா ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு கலந்தாய்வு சிறப்பாக நடத்தினார்கள். மேலும் இந்த கலந்தாய்விற்காக பல்வேறு ஆசிரியர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டன. கலந்தாய்வில் 219 மாணவர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த கலந்தாய்வு நடைபெறும் தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிற்சி ஆட்சியர் சம்யக்ஜெயின் நேரில் சென்று கலந்தாய்வு நடைபெரும் பணிகளை பார்வையிட்டு மாணவர்களை ஊக்கப்படுத்தினார்கள்.

# அரியலூரில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 5-ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு



அரியலூர், ஆக.8-

அரியலூரில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின், ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட கலைஞர் கருணாநிதியின் உருவப்படத்திற்கு, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு. சின்னப்பா மலர் தூவி மரியாதை செலுத்தினார். கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அரியலூர் திமுக மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் உள்ள கலைஞர் கருணாநிதியின் உருவ சிலை மற்றும் செட்டி ஏரிக்கரையில் அலங்கரித்து அமைக்கப்பட்ட கலைஞர் கருணாநிதியின் உருவப்படத்துக்கு, மாவட்ட திமுகமற்றும்நகரதிமுகசார்பில், மாவட்ட அவைத் தலைவர் சிவ மாணிக்கம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ இளையராஜா, நகர செயலாளர் முருகேசன், ஒன்றியச் செயலாளர் அன்பழகன், மற்றும் கட்சி நிர்வாகிகள் சார்பில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஜெயங் கொண்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் கசோககண்ணன்தலைமையில், கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்ட மௌன ஊர்வலம் நடைபெற்றது.இதே போல, அரியலூர் மாவட்டத்துக்குட்பட்ட செந்துறை, ஆண்டிமடம், திருமானூர், தா பழூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலும், திமுகவினர் கலைஞர் கருணாநிதி உருவப்படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

# திருமயம் அருகே அரசுப் பள்ளியில் மாணவர்களுக்கான கபாடி போட்டி



திருமயம், ஆக. 8-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா வார்ப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியில் குறுவட்ட அளவில் 14, 17,19 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கபாடி போட்டி வார்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் அழகு மலர் மலைச்சாமி தலைமையில் நடைபெற்றது.

போட்டியை ஊராட்சி மன்றத் தலைவர் துவக்கி வைத்தார், மேலும் தலைமை ஆசிரியர் தங்கையா பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மலைச்சாமி மேலும் அனைத்து பள்ளிகளில் இருந்து வருகை தந்த உடற்கல்வி ஆசிரியர்கள் உடற்கல்வி இயக்குனர்கள் 756 மாணவ, மாணவிகள், ஊர் பொறுப்பாளர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர் விழா முடிவில் உடற்கல்வி ஆசிரியர் பழனிச்சாமி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# புதுக்கோட்டை இந்திய மருத்துவ சங்கம் சார்பில் மருத்துவதினம் : மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கல்



புதுக்கோட்டை, ஆக.8-

புதுக்கோட்டைகிளை இந்திய மருத்துவ சங்க மருத்துவர் தின விழா இந்திய மருத்துவ சங்க அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு இந்திய மருத்துவ சங்கம் புதுக்கோட்டை கிளை தலைவர் டாக்டர். ராமமூர்த்தி தலைமை வகித்தார், டாக்டர் முகமது சுல்தான் அனைவரையும் வரவேற்றார், கௌரவ விருந்தினராக இந்திய மருத்துவ சங்கம் (மூத்த துணைத்தலைவர் தேர்வு புதுடெல்லி) டாக்டர் ஆர்.குணசேகரன் கலந்து கொண்டு 2023 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் சிறப்புடன் பணியாற்றும்.

புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி டாக்டர் ராஜ்மோகன்(முதல்வர் பொறுப்பு) மற்றும் முதன்மை மருத்துவர் டாக்டர் பெரியசாமி டாக்டர் கோமதி, டாக்டர் தையல்நாயகி, டாக்டர் சாந்திஅருள்அமுதன், டாக்டர் அப்துல்லத்திப், டாக்டர் அழகேசன், டாக்டர் ரவிநாதன் டாக்டர் கல்யாணகுமார், டாக்டர் சிவக்குமார் மற்றும் டாக்டர்கள் ராஜாராமன் டாக்டர் முனியன், டாக்டர் ராமமூர்த்தி, டாக்டர் ராமலிங்கம் டாக்டர் மதியழகன் டாக்டர் சரவணன் டாக்டர் அகமது மசூத், டாக்டர் ரவிச்சந்திரன் ஆகியோருக்கு விருதுகள் வழங்கி உரையாற்றினார் நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்வை.முத்துராஜா, சென்னை இந்திய மருத்துவ சங்கம் டாக்டர் இளங்கோவன் முன்னாள்தலைவர் சுவாமிநாதன் உள்ளிட்ட டாக்டர்கள் பேசினார்கள் முன்னதாக பரதநாட்டியம், இசை கச்சேரிகள் நடந்தது நிறைவாக டாக்டர் சாரதா மணி நன்றிகூறினார் விழா ஏற்பாடுகளை நிதி செயலாளர் டாக்டர் கோபாலகிருஷ்ணன் மற்றும் இந்திய மருத்துவ சங்க மருத்துவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயல் வீரர்கள் கூட்டம்



தென்காசி, ஆக. 8-

தென்காசி மாவட்டம் இலஞ்சி தனியார் மண்டபத்தில் நிகழ்ச்சியை தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயல் வீரர்கள் கூட்டம், தெற்கு மாவட்ட திமுக புதிய பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு அரசு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்தார். நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா, முன்னாள் அமைச்சர் பூங்கோதை, முன்னாள் மாவட்ட செயலாளர் மா. செல்லத்துரை, நகர்மன்ற தலைவர் சாதிர், அவைத்தலைவர் சுந்தர மகாலிங்கம், பொருளாளர் செரீப், துணை செயலாளர் கனிமொழி, ஒன்றிய குழுத் தலைவர் ஷேக் அப்துல்லா, பண்பொழி ராஜராஜன், கே.என். எல். சுப்பையா, ஆ.வெங்கடேசன், ரவிசங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் சாமிதுரை, செங்கோட்டை ரஹீம், ஐவேந்திரன் தினேஷ், சிங்கிலி பட்டி மணிகண்டன்,எ அந்தோணிசாமி புளியங்குடி, ராஜா வல்லம், கோ.மாறன், கடையநல்லூர் நகர செயலாளர் எஸ். அப்பாஸ், ஒன்றிய செயலாளர் சுரேஷ், நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர்ரகுமான், வளன் அரசு, முகைதீன் பிச்சை என்ற துரை, ஹக்கீம், ஒன்றியச் செயலாளர் அழகுசுந்தரம், வேலுச்சாமி, கருப்பணன், திவ்யா மணிகண்டன், ஆய்க்குடி சேர்மன் சுந்தர்ராஜன் ஆகியோர் செயல்வீரர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் மணிக்கூண்டு பள்ளிவாசல் முன்பாக திமுக கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் முதல்வருமான கலைஞர் கருணாநிதியின் 5-வது ஆண்டு நினைவுதினத்ததை முன்னிட்டு கடையநல்லூர் திமுக நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ் தலைமையில், முன்னாள் தென்காசி மாவட்டச் செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லத்துரை முன்னிலையில் மாலை அணிவித்து, மலர் தூவி, மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர்ரகுமான், திட்டக்குழு உறுப்பினர் முருகன், துணைச் சேர்மன் ராசையா, துணைச் செயலாளர் காசி, அவைத் தலைவர் முருகன், முருகையா, காளிமுத்து, செய்யது மசூது, சுகுமார், ஹபீப், இத்தாலியன் பீரப்பா, கோட்டைச்சாமி, அயூப்கான், அசிஸ், நல்லையா, சேகர், வீர மணிகண்டன், ஜாகிர் உசேன், வீரபுத்திரன், காமராஜர், கோட்டைச்சாமி, அழகிரி, ரத்தினம், கமலக்கண்ணன், வெள்ளைச்சாமி, சண்முக சாமி, பாரி, பாலசுப்பிரமணியன், சேப்பிள்ளை, அப்துல் மஜீத் ஆகியோர்5-ம் ஆண்டு நினைவஞ்சலியில் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் திருவரங்குளம் கடைவீதியில் இருந்து தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் அருவடிவேல் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது, பின்னர் பேருந்து நிறுத்தம் அருகில் அமைக்கப்பட்டிருந்த தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி படத்திற்கு அரு.வடிவேல் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்தினர், நிகழ்ச்சியில் திமுக பொதுக்குழு உறுப்பினர் மணிஅம்பலம் சுப்பிரமணியன் மாவட்ட பிரதிநிதிகள் இம்மனாம்பட்டி வீர மெய்யர் எஸ்.முருகன் ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ் ஒன்றிய துணைச் செயலாளர் சண்முகசுந்தரம் திருவரங்குளம் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஆறுமுகம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் சுரண்டையில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வி. ஜெயபாலன் தலைமையில், முன்னாள் திமுக தலைவரும், முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதியின் 5-வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மார்பளவு சிலையை உருவாக்கி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்சாயத்து தலைவி தமிழ்ச்செல்வி போஸ், சங்கரன்கோவில் எம்எல்ஏ ராஜா, இசக்கி பாண்டியன், கோ.மாறன்,எ. சுரேஷ், ஒன்றியச் செயலாளர்கள் பெரியதுரை, வெற்றி விஜயன், சங்கரன்கோவில் நகரச் செயலாளர் பிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், இளைஞர் அணி அமைப்பாளர் முகேஷ், மாவட்டப் பொருளாளர் சரவணன் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி புதுக்கோட்டையில் நேற்று அமைதி ஊர்வலம் நடைபெற்றது. தமிழக அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, மெய்யநாதன், வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா, நகர செயலாளர் செந்தில் மாவட்ட நிர்வாகிகள் டாக்டர் மு.க. முத்துகருப்பன், பெரியண்ணன் அரசு, அரு. வீரமணி, கவிதை பித்தன், சந்திரசேகரன், சுப சரவணன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பங்கேற்று சிறப்பித்தனர்.

# அமைச்சர் செந்தில் பாலாஜியை விசாரணைக்காக காவலில் எடுத்தது அமலாக்கத் துறை




சென்னை, ஆக. 8-

ஆகஸ்ட் 12-ம் தேதி வரை காவலில் வைத்து விசாரிக்க அமலாக்கத் துறைக்கு அனுமதியளித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், புழல் சிறையில் இருந்து அமைச்சர் செந்தில் பாலாஜி விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவு நகலை புழல் சிறை அதிகாரிகளிடம் வழங்கிய அமலாக்கத் துறை அதிகாரிகள், அமைச்சர் செந்தில் பாலாஜியை காவலில் எடுத்தனர். மூன்று வாகனங்களில் வந்த அமலாக்கத் துறை அதிகாரிகள், துப்பாக்கி ஏந்திய சிஆர்பிஎஃப் காவலர்களின் உதவியோடு செந்தில் பாலாஜியை அழைத்துச் சென்றனர். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்துக்கு செந்தில் பாலாஜி அழைத்து வரப்படுகிறார். அங்கு வைத்து ஆகஸ்ட் 12-ம் தேதி வரை ஐந்து நாட்கள் விசாரணை நடைபெறவுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அமலாக்கத்துறை கைது செய்தது சட்ட விரோதம் என செந்தில் பாலாஜி தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. செந்தில் பாலாஜி தரப்பில் மூத்த வழக்கறிஞர் கபில் சிபலும், அமலாக்கத் துறை தரப்பில் துஷார் மேத்தாவும் ஆஜராகி தங்கள் வாதத்தை முன்வைத்தனர். இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், தேதி குறிப்பிடாமல் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ஏ.எஸ்.போபண்ணா மற்றும் எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பை வெளியிட்டது. செந்தில் பாலாஜி தரப்பில் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தனர்.

மேலும், அமலாக்கத்துறையினர் செந்தில் பாலாஜியை கைது செய்தது சட்டப்படி சரியான நடவடிக்கை. அமலாக்கத் துறையினர் ஒருவரை கைது செய்யும்போது அந்த நபரை காவலில் வைக்கலாம், அது நீதிமன்ற காவலாகவும் இருக்கலாம் என்ற புரிதலின் அடிப்படையில் செந்தில் பாலாஜியின் மனைவி தொடர்ந்த ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என கூறிய நீதிபதிகள், இந்த வழக்கை தள்ளுபடி செய்தனர். மேலும், அமலாக்கத்துறை ஐந்து நாட்கள் காவலில் எடுத்து விசாரணை நடத்தலாம் எனவும் தெரிவித்தனர்.

இதையடுத்து, செந்தில் பாலாஜியை 5 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், செந்தில் பாலாஜியை வரும் 12ம் தேதி வரை அமலாக்கத்துறை காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி வழங்கி உத்தரவிட்டது. அப்போது அமலாக்கத்துறை காவலில் வைத்து விசாரிக்கும் நாட்களில் தினமும் இரண்டு முறை காவேரி மருத்துவமனையில் பரிசோதனை செய்ய உத்தரவிடவேண்டும் என செந்தில் பாலாஜி தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்கு பதிலளித்த அமலாக்கத்துறை வழக்கறிஞர், செந்தில் பாலாஜியின் உடல்நிலை குறித்து அமலாக்கத்துறை கவனித்துக்கொள்ளும் என உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டிருப்பதாக கூறினார். உச்ச நீதிமன்றம் இவ்வாறு கூறியிருப்பதால் இது சம்பந்தமாக எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது என முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி கூறினார்.

## சங்கரன்கோவிலில் திமுக சார்பில் முன்னாள் முதல்வர் கலைஞர் நினைவு தின நிகழ்ச்சி

# வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்



சங்கரன்கோவில்,ஆக.8-

திமுக கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சருமான முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதியின் 5வது நினைவு தினத்தை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சங்கரன்கோவிலில் கலைஞரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்து கலைஞரின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேல், யூஎஸ்டி சீனிவாசன், பரமகுரு, சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன்,மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ராஜதுரை, மனோகரன், புனிதா, மாவட்ட பொருளாளர் சரவணன் ஒன்றியச் செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், பெரியதுரை, ராமச்சந்திரன், நகரச் செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி அந்தோணிசாமி, பேரூர் திமுக செயலாளர்கள் ரூபி பாலசுப்ரமணியம், மாரிமுத்து, மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் கேஎஸ்எஸ் மாரியப்பன், மாவட்ட மகளிர் அணித் தலைவர் அன்புமணி கணேசன், வார்டு செயலாளர் துரைபாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகேஷ் ,இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சரவணன், ராஜ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் நெசவாளர் அணி சந்திரன்,மாணவரணி உதயகுமார், தொண்டரணி அப்பாஸ் அலி, மாவட்ட பிரதிநிதி செய்யதுஅலி, வக்கீல்கள் கண்ணன், ஜெயக்குமார், சதீஷ், நகர அவை தலைவர் முப்புடாதி, மற்றும் ஜிந்தாமைதீன் காளிச்சாமிபாண்டியன், ஓய்வு பெற்ற தாசில்தார் சூரியநாராயணமூர்த்தி அஜய்மகேஷ்குமார், கவுன்சிலர்கள் அலமேலு, புஷ்பம் ,ராஜாஆறுமுகம், வார்டு செயலாளர்கள் தங்கவேல், கோமதிநாயகம், வீராசாமி , தென்காசி மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் நாகூர் கனி,சிவா பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை சிம்மகல்லில் உள்ள முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சிலைக்கு திராவிட கழகம் சார்பாக தலைமைக் திமுக அமைப்பாளர் செல்வம் மாலை அணிவித்தார். உடன் மாநகர் மாவட்டத் தலைவர் முருகானந்தம், பகுதி செயலாளர் பிச்சை பாண்டி, சிவா, மேலூர் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் பாலா, உசிலை மாவட்ட திமுக தலைவர் எரிமலை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தொழில்முனைவோர்கான தளம் செடாய்-ன் நிறுவனர் டாக்டர் ஏ.எஸ் ரியாஸ் பிறந்தநாளை செடாய்-ன் உறுப்பினர்களான தொழிலதிபர்கள் அனைவரும் இணைந்து மதுரை மேரியாட் ஹோட்டலில் சிறப்பாக கொண்டாடினர், இந்நிகழ்வில் மதுரையில் உள்ள பல்வேறு முக்கிய தொழிலதிபர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

# புதுக்கோட்டை அருகே ஆசிரியரை மாற்ற கோரி பள்ளியை பூட்டி மாணவர்களுடன் பெற்றோர் போராட்டம்

புதுக்கோட்டை, ஆக. 8-

புதுக்கோட்டை மாவட்டம் அண்டக்குளம் அருகே கொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பணியாற்றும் கணித ஆசிரியர் முறையாக பள்ளிக்கு வராததால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக குற்றம்சாட்டி அந்த பள்ளிக்கூடத்தை பூட்டி பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் அண்டக்குளம் அருகே உள்ள கொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுமார் 260 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்நிலையில் இப்பள்ளியில் பணியாற்றும் கணித ஆசிரியர் முல்லைச்செல்வன் பள்ளிக்கு முறையாக வராமல் விடுப்பில் இருப்பதாகவும் வந்தாலும் முறையாக பாடம் நடத்துவதில்லை எனவும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று பள்ளிக்கு வந்த 200-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் பள்ளியை பூட்டி பள்ளிக்கு முன்பாக முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பரபரப்பாக சூழ்நிலை ஏற்பட்ட சூழலில் அங்கு வந்த வட்டார கல்வி அலுவலர் மெகராஜ் பானு மற்றும் காவல்துறையின் போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி சம்பந்தப்பட்ட கணித ஆசிரியரை மாற்றம் செய்துவிட்டு வேறு ஆசிரியரை நியமிப்பதாக வாக்குறுதி அளித்ததன் அடிப்படையில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு பள்ளிக்குள் சென்றனர். கல்வித்துறை அதிகாரி உத்திரவாதம் அளித்தது போல் பத்து நாட்களுக்குள் கணித ஆசிரியரை மாற்றாவிட்டால் மீண்டும் போராட்டம் நடத்துவோம் எனவும் பெற்றோர்கள் அப்போது தெரிவித்தனர்.

இதுகுறித்து தொடக்கப் பள்ளிகளுக்கான மாவட்ட கல்வி அலுவலர் சுவாமி முத்தழகிடம் கேட்டபோது, சம்பந்தப்பட்ட பள்ளிக்கு வட்டார கல்வி அலுவலர் மெகராஜ் பானுவைஅனுப்பி பெற்றோர்கள் குற்றம் சாட்டும் கணித ஆசிரியர் குறித்து விசாரணை செய்துநடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

## வழக்கறிஞர் அறிவிப்பு

எனது கட்சிக்காரர் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, குலமங்கலம் அஞ்சல், கொப்பரம்பட்டி கிராமம் ஆண்டியப்பக் கோனார் மகன் 63 வயதுடைய **செல்வராஜ்** என்பவர் குலமங்கலம் கிராமத்தில் உள்ள சொத்து பிரச்சனை சம்பந்தமாக மாண்பமை சார்பு நீதிமன்றம் திருமயத்தில் OS NO.348/23 என்ற வழக்கு எதிர்வரும் 10.8.2023-ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, பனையப்பட்டி கிராமம் உதயசூரியபுரம் கிராமத்தில் வசிக்கும் கருப்பையா மகன் 43 வயதுடைய செந்தில் என்பவர் இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு நீதிமன்றத்தில் மூலம் பலமுறை சம்மன் அனுப்பியும் பெற்றுக் கொள்ளவில்லை. மாண்பமை நீதிமன்ற உத்தரவின் பேரில் செய்தித்தாள் விளம்பரம் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது.

வழக்கறிஞர்கள்
ஜெகநாதன் BA.,BL.,
V. ஸ்ரீதர் BA.,BL.,
புதுக்கோட்டை

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# சொத்து குவிப்பு வழக்கு முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கருக்கு நீதிமன்றம் சம்மன்

# அமைச்சர் செந்தில் பாலாஜியை விசாரணைக்காக காவலில் எடுத்தது அமலாக்கத்துறை





# புதுக்கோட்டை: பள்ளிக்கு வராத ஆசிரியரை கண்டித்து பூட்டு போட்ட பெற்றோர்


| சென்னை / புதுக்கோட்டை | 08.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

திலீப் சர்தேசாய் , அருச்சுனா விருது பெற்ற இந்தியத் துடுப்பாளர் (பி.1940) (இ.2007)



டிரோன் பர்னான்டோ , இலங்கை அரசியல்வாதி (பி.1941) (இ.2008)



சோ. தர்மன் , தமிழக எழுத்தாளர் (பி.1952)



## இன்றைய நினைவு நாள்

உமையாள்புரம் சுவாமிநாத ஐயர் , கருநாடக இசைக் கலைஞர் (பி.1867) (இ.1946)



எஸ். நிஜலிங்கப்பா , கர்நாடக அரசியல்வாதி (பி.1902) (இ.2000)



கா. கைலாசநாதக் குருக்கள் , ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர் (பி.1921) (இ.2000)



## பன்னாட்டுப் பூனை நாள்